11.03.2026

# மனித உரிமைகள் ஆணையம்?

## கடும் விமர்சனங்கள்

- மனித உரிமைகளைப் பாதுகாத்தல் / மேம்படுத்துதல், மனித உரிமை மீறல்களை ஆய்வுசெய்தல் விசாரணை நடத்துதல், அரசு – பொது நிர்வாகத்தைக் கண்காணித்தல், பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் – நீதியை உறுதி செய்தல், தேசிய, மாநில – சர்வதேச மனித உரிமை அமைப்புகளுடன் இணைந்து, மனித உரிமைகளின் முன்னேற்றத்துக்காகச் செயல்படுதல் போன்ற பல்வேறு செயல்பாடுகளைச் செய்ய வேண்டிய கடமை மனித உரிமை ஆணையத்துக்கு உண்டு.

- ஆனால், சமீபத்திய ஆண்டுகளில் அதன் சுதந்திரம், பன்முகத்தன்மை, செயல்திறன் ஆகியவை குறித்துக் கடுமையான விமர்சனங்கள் எழுந்துள்ளன.

- உலகளாவிய தேசிய மனித உரிமைகள் நிறுவனங்களின் கூட்டமைப்பின் (Global Alliance of National Human Rights Institutions - GANHRI) அங்கீகாரத் துணைக் குழு (Sub-Committee on Accreditation - SCA), இந்திய ஆணையத்தின் தரநிலையை 'A' இலிருந்து 'B' க்குக் குறைக்கக் கடந்த ஏப்ரல் மாதம் பரிந்துரைத்தது.

- இதை எதிர்த்து மேல்முறையீடு செய்த மனித உரிமைகள் ஆணையத்தின் முயற்சி பலனளிக்காமல், தரம் குறைக்கப்பட்ட பரிந்துரை, 4.12.2025 அன்று உறுதிசெய்யப்பட்டது.

- இது ஏப்ரல் 2026 முதல் அமலுக்கு வரும்.

## தரக்குறைப்பின் பின்னணி

- மனித உரிமைகளைப் பாதுகாக்கும் பணியில் தேசிய மனித உரிமைகள் நிறுவனங்கள் (NHRIs) பின்பற்ற வேண்டிய சர்வதேச அளவுகோல்களை 'பாரிஸ் கொள்கைகள்' வரையறுக்கின்றன.

- ஒரு நாட்டின் மனித உரிமைகள் ஆணையம் இந்தக் கொள்கைகளை எந்த அளவுக்குப் பின்பற்றுகிறது என்பதை உலகளாவிய தேசிய மனித உரிமைகள் நிறுவனங்களின் கூட்டமைப்பின் அங்கீகாரத்துணைக் குழுதான் மதிப்பீடு செய்கிறது.

## குறைபாடுகள்

- ஆணையத்தின் அங்கீகாரத்தைத் தரம் குறைக்க முக்கியமாக மூன்று துறைகளில் நீண்ட காலமாக நிலவும் குறைபாடுகள் சுட்டிக்காட்டப்படுகின்றன.

- சுதந்திரம், அமைப்பு, பன்முகத்தன்மை – இவை முதன்மையானவை.

- ஆணையத்தின் சுதந்திரமே அதன் முதன்மையான பலம்.

- ஆனால், எஸ்.சி.ஏ–வின் அறிக்கைகள் ஆணையத்தின் உண்மையான – உணரப்பட்ட சுதந்திரம் (actual and perceived independence) குறித்துக் கவலை தெரிவிக்கின்றன.

- 1. ஆணையத்தின் பொதுச் செயலாளர், விசாரணை இயக்குநர் போன்ற உயர் பதவிகளுக்கு, மத்திய அரசில் பணிபுரியும் சிவில் ஊழியர்கள், காவல் துறை அதிகாரிகள் மட்டுமே நியமிக்கப்பட வேண்டும் என்கிற சட்டம், ஆணையத்தின் சுதந்திரத்தைக் கேள்விக்கு உள்ளாக்குகிறது.

- இந்தப் பணியாளர்கள் ஆதிக்கம் செலுத்துவது, அரசாங்கத்தின் தலையீடு இல்லாமல் சுதந்திரமாகச் செயல்படும் திறனைக் குறைக்கிறது.

- பதவி நியமனத்தில் பன்முகத்தன்மை இல்லாமை – ஆணையத்தின் தலைவர் உச்ச நீதிமன்றத்தின் முன்னாள் தலைமை நீதிபதியாகவோ முன்னாள் நீதிபதியாகவோ இருக்க வேண்டும் என்கிற கட்டாய விதி, போட்டியாளர்களின் எண்ணிக்கையைக் கடுமையாகக் கட்டுப்படுத்துகிறது.

SURESH

- பெரும்பாலான உறுப்பினர்கள் நீதித் துறையில் இருந்து நியமிக்கப்படுவதால், ஆணையத்தின் முடிவெடுக்கும் அமைப்பில் பல்வகைமை, பன்முகத்தன்மை (diversity and plurality) குறைபாடு உள்ளது.
- ஆணையத்தின் மொத்த ஊழியர்களில் பெண்களின் பிரதிநிதித்துவம் போதுமானதாக இல்லை.
- வெளிப்படையற்ற தேர்வுச் செயல்முறை இல்லை.
- 2. செயல்திறன் – பொறுப்புடைமை, ஆணையத்தில் புகார்களைக் கையாளும் செயல்பாடுகள் – வழிமுறைகள் உடனடித் தீர்வு வழங்காமல், தாமதங்களுக்கு வழிவகுக்கின்றன.
- மனித உரிமை மீறல்களுக்காகக் காவல் துறையே குற்றம்சாட்டப்படும் சூழ்நிலைகளில், அதே துறையைச் சார்ந்த காவல் அதிகாரிகளை விசாரணையில் ஈடுபடுத்துவது, ஆணையத்தின் மீதான நம்பகத்தன்மையைப் பாதிக்கிறது.
- 3. இறுதியாக – குடிமைச் சமூகத்துடனான உறவு.
- மனித உரிமைகளுக்காகச் செயல்படும் குடிமைச் சமூக அமைப்புகளுடன் பயனுள்ள – ஆக்கபூர்வமான ஒத்துழைப்பை ஆணையம் கொண்டிருக்கவில்லை.
- ஆணையத்துக்கு ஆலோசனைக் குழுக்கள் இருந்தபோதிலும், பெயரளவுக்கு ஆணையச் செயல்பாடுகளை விமர்சிக்காத சில அமைப்புகளுடன் மட்டும் தொடர்பில் இருப்பது சிறந்த செயல்பாட்டுக்கு வழிவகுக்காது.

**விளைவுகள்**

- தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் அங்கீகார நிலை 'A' இலிருந்து 'B' ஆகக் குறைந்தால், அது சர்வதேச அரங்கில் சில குறிப்பிடத்தக்க விளைவுகளை ஏற்படுத்தும்.
- ஐ.நா. அவையின் மனித உரிமைகள் கூட்டங்களில் சுதந்திரமாகச் செயல்படுவது, பங்கேற்பது ஆகியவற்றுக்கான வாய்ப்பையும் ஆணையத்துக்கு உள்ள அதிகாரத்தையும் இழக்க நேரிடும்.

**செய்ய வேண்டியவை**

- தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் தரக் குறைப்பு என்பது ஆணையத்தின் மீது எழுப்பப்பட்ட விமர்சனங்களின் ஆழத்தையும் தீவிரத்தையும் பிரதிபலிக்கிறது.
- நியமனங்களில் சுதந்திரத்தைப்பேணுவது, பன்முகத்தன்மையை உறுதிசெய்வது, புகார்களைத் திறம்படக் கையாளுதல், அமைப்புரீதியான மீறல்களுக்கு எதிராகத் துணிச்சலாகக் குரல்கொடுத்தல் என்பது போன்ற விஷயங்களில் ஆணையம் இன்னும் நீண்ட தூரம் செல்ல வேண்டியுள்ளது.
- தரக் குறைப்பு என்பதை ஓர் எச்சரிக்கை மணியாகக் கருத வேண்டும்.
- இது, பாரிஸ் கொள்கைகளுடன் முழுமையாக இணங்குவதை உறுதி செய்வதற்கும் இந்தியாவில் உள்ள அனைத்து மக்களுக்கும் மனித உரிமைகளைப் பாதுகாத்து நீதியை நிலைநாட்டுவதற்கும் ஒரு வாய்ப்பை வழங்குகிறது.

